தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத்

திங்கள் வெளியீடு

துணர் டுச	திருவள்ளுவர் யாண்டு உமகஉ இரௌத்திரி மார்கழி 1980-81 திசம்பர் - சனவரி	மலர் சூ

தொல்காப்பிய மெய்ம்மயக்க மரபுகள்

பேராசிரியர் ச. பாலசுந்தரம் கரந்தைப் புலவர் கல்லூரி.

(துணர் 54, மலர் 6 — பக்கம் 163 — தொடர்ச்சி)

அதனானன்றே நச்சினார்க்கினியர் உடனிலை, என்பதற்கு உயிர் மெய்யெனப் பொருள் காணவும் — தெரியுங்காலை என்பதனை மிகையாகக் கருதி அதனைக்கொண்டு உயிரும், உயிர்மெய்யும் உயிரும் மெய்யும் மயங்கும் எனப் பொருள் காணவும் முற்பட்டார். இவ்வாறு வலித்தும் நலித்தும் பொருள் காண்பது இவரியல்பு. இதனால் இவர் நூலாசிரியருக்குப் பெருமை சேர்ப்பதாகக் கருதுகின்றார். இஃது ஆசிரியரைக் குறைவு படுத்தும் என்பதை அவர் எண்ணிலர். இவை யெல்லாம் காலச்சூழலால் விளைந்தவையன்றி அவர்தம் அறிவாற்றற் குறையினால் நேர்ந்தவையல்ல எங்க.

மெய்ம்மயக்கத்தை மட்டும் ஆசிரியர் விதந்து கூறியதேன் ?

ஆசிரியர் உயிரோடு மெய்யும் — உயிரோடு உயிர்மெய்யும் உயிர்மெய்யோடு மெய்யும் உயிர்மெய்யோடு உயிர்மெய்யும் கூடி நிகழும் கூட்டம் பற்றி யாதும் கூறாமல் மெய்யின் முன் மெய் வந்து கூடும் மயக்கத்தைப்பற்றி மட்டும் விளக்கிக் கூறியதற்கு இலக்கண மரபு அடிப்படையின் முன்பு சிறிது கூறப்பெற்றது. ஈண்டு மொழியியல் அடிப்படையில் சிறிது விளங்கிக் கொள்ளுதல் நலமாதலின் அதுபற்றிச் சிறிது காண்போம்.

உயிரெழுத்துக்கள் தனித்தியங்கும் தன்மையவாதலின் அவை ஒன்றன்பின் ஒன்று வருதல் தொடர்ச்சியாகுமே யன்றி மயக்க

மாதலில்லை உயிர்மெய்யுள் மெய்யினது தன்மை புலப்பட ஒலிப்பது உயிர்மட்டுமேயாதலின் அதுவும் மயக்கமாகாது. உயிரின் பின் மெய் வரின் அதுவும் தொடர்ச்சியேயன்றி மயக்கமாகாது. இதனை

" இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி " என ஆசிரியர் கூறுமாற்ருன் அறியலாம். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்று அடுக்கி வருதலை மயக்கமெனக் கருதுதல் மயக்கம் என்னும் சொற்பொருளை நன்கு அறியாமையேயாம்.

இனி மெய்யின் பின் மெய் வந்து கூடுதலே மயக்கம் என்பதனை ஒர் எடுத்துக்காட்டு வாயிலாகக் காண்போம். " இன்பம் " என்பது ஒருசொல். இதனுள் இ ன் ப் ம் அ ம் என ஐந்து எழுத்துக்கள் உள்ளன இவற்றைத் தொடர்ந்து ஒலிக்குங்கால் முதற்கண் இகர உயிர் ஒலிக்கின்றது. அதனைச் சார்ந்து னகரமும் பகரமும் புலனு கின்றன. பின்னர் அகர உயிர் பகரத்தை இடமாகக்கொண்டு ஒலிக் கின்றது. இகரத்திற்கும் அகரத்திற்கும் இடையே நிற்கும் னகரமும் பகரமும் உயிர்ப்பொலி இல்லாதவை. ஆகலின் இகர ஒலியின் துணை யால் அவை இசைக்கப்பெற்றுச் செவிப்புலனுகின்றன. அஃதாவது இகரஒலிதோன்றி முடிவுருமல் இசைத்துக்கொண்டே இருக்கும் நிலை யில் னகர ஒற்றைப்பிறப்பிக்க நாவானது முன்வாயின் மேற்பல்லின் அடியைத்தொட்டு னகரத்தைத் தோற்றுவிக்கும். அதே செவ்வியில் பகர மெய்யைப் பிறப்பிக்க வாயிதழ்கள் இரண்டும் சேர்கின்றன. அக்கணமே இடையறவு படாமல் பின் அகர ஒலி சேர்ந்திருந்த வாய் இதழைப் பிரித்து அங்காத்தலைச்செய்து வெளி வருகின்றது. னகர பகரங்கள் இகர உயிரின் ஒலித் துணையோடு செவிப் புலனு கின்றன, ஈண்டு னகர ஒற்றிற்காகத் தன் இசையை நீட்டும் இகர உயிர் அவ்வழி மூக்கின் வழியே தன் உயிர்ப்பைச் சிறிது வெளிப் படுத்தும்; ஆங்கே னகர ஒற்றைச் சார்ந்து பகரம் பிறக்கும்போது மூக்கின் வளியிசை உடனே கண்டத்து இசையாக மாறிய பின் அகரம் வெளிப்படுகின்றது. அதனுன் னகரத்தின் மென்மைத் தன்மை பகரத்தையும் சார்தலால் பகரத்தின் வன்மை குறைந்து இசைக்கின்றது. இவ்வாறு ஒர் உயிரொலியினைச் சார்ந்து இரண்டு ஒற்றுக்கள் கூடி இசைக்குங்கால் நிற்கும் மெய்யெழுத்தின் இசை யோடு வரும் மெய்யின் இசைகலந்து மயங்கித்திரிபடைதலினுல் மயக்கம் மெய்யெழுத்துக்களுக்கே உரியதென்பது தெளிவாகிறது அதனுல் னகரத்தோடு பகரம் மருங்கிற்று எனல் இலக்கண மாகின்றது என்க.

இதனுன் தனித்து நிற்கும் மெய்யெழுத்துள் மாத்திரையின்றி நிற்கும் மெய்யெழுத்து உயிரைச்சார்ந்து வருங்கால் அம்மாத்திரை

பெற்று இசைக்கின்றமையைத் தெளியலாம் எனவே தனித்து நிற்கும் மெய்யோடு வந்து சேரும் உயிர்மெய் எழுத்தின்கண் உள்ள மெய்யைச்சுட்டி அம்மெய் மயங்கிற்று என இலக்கண நூலார் கூறுவதற்கும் இதுவே காரணமாயிற்றெனத் தெளிக.

இனி இன்னின்ன மெய்யோடு இன்னின்ன மெய்களே வந்து மயங்கும் என்பதற்குரிய காரணத்தையும் ஓரெடுத்துக்காட்டு வாயிலாகப் பார்ப்போம்.

ககர மெய் ட ற ல ள ய ர ழ ங ண ன க என்னும் பதினொரு மெய்களுடன் மயங்கும். ச த ப ஞ ந ம வ என்னும் ஏழு மெய்களுடன் மயங்காது.

ககரம் முதல்நா முதலண்ணத்தை நன்கு பொருந்துவதனாற் பிறப்பது. இது டகரத்தோடு மயங்குகின்றது. சகரத்தோடு மயங்குவதில்லை. ஏன் ?

டகர ஒற்றைப் பிறப்பிப்பதற்காக முன் அண்ணத்தை நாநுனிவிளிம்பளவே தொட்டு நிற்கும் ஆதலின் நாவானது அப்படியே சிறிது உள்வளைந்து அடிப்பகுதியால் ககரத்தைப் பிறப்பிக்க முதலண்ணத்தை விரைந்து ஒற்றிவிடும், சகரத்தைப் பிறப்பிக்க இடைநா இடையண்ணத்தை நாவானது நன்கு பொருந்தியிருக்கும். அந்நிலையினின்றும் விடுபட்டாலன்றி நாவின் அடிப்பகுதி ககரத்தை ஒற்றுவதற்காகப் பொருந்த இயலாது. ஆதலின் ககரம் தன் இனமாகிய டகரத்தோடு மயங்குகின்றது சகரத்தோடு மயங்குதலில்லை.

இவ்வாறே ல ள ற ர ண ன இவை அண்ணத்தை நாநுனி ஒற்றவும் சிறிது வருடவும் பிறப்பன ஆதலின் இவற்றின் பின்வரும் ககரத்தை நாவானது சிறிது உள்வளைந்து ஒற்ற இடர்ப்படாது ங ய இவை அடிநா அண்ணத்தை ஒற்ற மூக்கொலியாலும் சிறிது உயிர்ப்பொலியாலும் பிறப்பன ஆதலின் அக்கணமே ககரத்தைப் பிறப்பிக்க இடர்ப்படுவதில்லை யாகலின் இவற்றோடு ககரம் மயங்கிப் பிறக்கின்றது.

இனி, தகரம் பிறக்க நாவானது முன் அண்ணத்தை நன்கு பொருந்தி நிற்பதனாலும் ஞகர நகரங்கள் சகர தகரங்களின் பிறப்பிடத்தையே ஒத்தி மூக்கொலியால் பிறப்பன ஆகலானும். இவற்றோடும் ககரம் மயங்காதாயிற்று. ப—வ—ம மூன்றும் இதழ்பற்றிப் பிறப்பவையாதலின் இதழின் செயல் நிறைந்து முடிந்த பின்னரே

நாவானது தொழிற்பட இயலுமாகலின் இவற்றோடும் ககரம் மயங்காதாயிற்று எனத் தெரியலாம், இவ்வாறே ஏனைய ஒற்றுக்களும் தத்தம் பிறப்பிட அமைதிக்கேற்ப மயங்குதலும் — மயங்காமையும் ஆகிய நிலைமையை அடைகின்றன. இவற்றை முறைப்படி இசைத்துச் செவிகருவியாக ஓர்ந்தறியலாம்.

இதுகாறுங் கூறியவாற்ருல் ஆசிரியர் புள்ளி எழுத்துக்கள் பதினெட்டும் மெய்யென்னும் ஓரினம்பற்றி அவை மொழியிடத்து வருங்கால் நின்ற ஒற்ருேடு பின்வரும் ஒற்று இணையும் நிலையை அவ்வவற்றின் பிறப்பிட அடிப்படையில் நோக்கி அறிவியலுக்கியைய மயக்க விதிகூறியுள்ளார் என்பதும் (வேற்றுநிலை என்றும் உடனிலை என்றும் பிரித்தல் அவர் கருத்தன்றென்பதும் மொழியியலுக்கு அதனாற்போந்த பயன் ஒன்றுமில்லை என்பதும் நச்சினார்க்கினியரின் பிரிப்பு மொழியியல் மரபுக்கும் ஆசிரியர் கருத்துக்கும் இயையாதது என்பதும் பிறவும் புலப்படும்.

இனி அடுத்து வரும் நூற்பாக்களின் பொருளைக் காண்போம், '' அம்மூவாறும் '' என்னும் நூற்பாவின் முதல் இரண்டடிகள் அதிகாரச்சூத்திரம் என்பது மேலே விளக்கப் பட்டதாகலின் இறுதி இரண்டு அடிகளின் பொருளைக் காண்போம்.

டறலள என்னும் புள்ளி முன்னர்க்
கசப வென்னும் மூவெழுத் துரிய

பொருள்:— (மெய் மயக்குடனிலை தெரியுங்கால்) டறலள என்னும் ஒற்றெழுத்துக்கள் நிற்க அவற்றின் மேல் கசப என்னும் மெய்கள் வந்து (தனித்தனியே) மயங்கற்கு உரியவாம்.

எ- டு:— உட்கு—கற்க—செல்க—கொள்க
வெட்சி—முயற்சி—வல்லி— நீள்சினை
தட்பம்—கற்பனை—செய்ய—கொள்ப. எனவரும்.

அடுத்த நூற்பா, அவற்றுள்,
லளஃகான் முன்னர் யவவுந் தோன்றும்

பொருள் .— மேற்கூறிய டறலளக்களுள் டற ஒழிந்த ஏனைய லளக்களின் மேல் யகரமும் வகரமும் வந்து மயங்கற்குரியவாம்.

எ-டு:— வில் யாழ்—வெள்யானை; செல்வம்—கள்வர்; எனவரும்,

அடுத்த நூற்பா:

ஙஞண நமன எனும் புள்ளி முன்னர்த்

தத்தம் மிசைகள் ஒத்தன நிலையே

பொருள்:— (மெய்ம்மயக்குடனிலை தெரியுங்காலை) ஙஞணநமன என்னும் மெல்லொற்றுக்களின் முன் (நெடுங்கணக்கினுள்) இவற்றிற்குமேல் இவற்றின் இனமாக நிற்கும் கசடதபற என்னும் வல்லெழுத்துக்கள் முறையேவந்து மயங்குதற்குப் பொருந்தியவையே யாகும்,

நிலை = மயங்கும் நிலை. நிலை ஒத்தனவே என ஏகரம் பிரித்துக்கூட்டப் பட்டது.

எ-டு:— பொங்கர்—தஞ்சம்—கண்டல்—பந்தர்—அம்பல்—வென்றி எனவரும்,

அடுத்த நூற்பா : அவற்றுள்

ணனஃகான் முன்னர்க்

கசஞப மயவவ் வேழும்உரிய

பொருள் ;— மேற்கூறப் பெற்ற மெல்லெழுத்தா றனுள் ணகன கரங்களின் முன்னர் (அதனதன் இனமேயன்றி) க்கசஞபமயவ என்னும் ஏழு மெய்யெழுத்துக்களும் வந்து மயங்கற்குரியவாம்-

எ-டு:—எண்கு—வெண்சாந்து—வெண்ஞான்—நண்பன்—உண்மை
மண்யாப்பு—மண்வயல். எனவும்
புன்கு—நன்செய்—வின்ஞான்—அன்பன்—நன்மை
பொன்யாழ்—பொன்வயல் எனவும் வரும்

அடுத்த நூற்பா :

ஞ ந ம வ என்னும் புள்ளி முன்னர்

யஃகான் நிற்றல் மெய்பெற்றன்றே

பொருள்:— (மெய்ம்மயக்குடனிலை தெரியுங்காலை) ஞ ந ம வ என்னும் ஒற்றெழுத்துக்களின் முன் யகரமெய் வந்து மயங்கி நிற்றல் பொருளுடையதேயாகும்,

மெய் = பொருள். அஃதாவது இலக்கணமாகிய பொருள். எனவே இலக்கணமாகும் என்றபடி.

எ-டு ;— உரிஞ்யானை—பெருந்யாக்கை திரும்யாடு—தெவ்யாழ் எனவரும். இவைதொகை மொழிகள் - இம்மயக்கம் தனி மொழிக்கண் வருதல் அரிது.

உரிஞ்யாது—வெரிந்யாது—சுரம்யாது—பிதவ்யாது எனப் புணர்மொழியின் கண்ணும் வரும்.

இந்நூற்பாவிற்கு உரைகூறிய நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டுக்கள் ஒன்றும் உரையாமல், ''இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின் அக்காலத்து ஒருமொழியாக வழங்கிய சொற்கள் உள வென்பது பெற்ரும். அவை இக்காலத்து இறந்தன'' என எழுதியுள்ளார். திரு. இரெட்டியார் அவர்கள் ''இவ்வொற்றுக்கள் ஒரு மொழிக்கண் மயங்கிவரும். சொற்கள் வடமொழியிலும் காணல்'' அரிதெனக்கூறி அவர் உரையை மறுத்துள்ளார்.

மெய்ம்மயக்கத்தை ஒரு மொழிக்குள்ளேதான் காணவேண்டுமென்னும் விபரீதக் கோட்பாட்டால் நச்சர் இவ்வாறு உரை கூறுகின்ருர் என்பதை உணரலாம்—இவர் முன்னர்ச் சிலவற்றிற்குக் காட்டியாங்குத் தொகைமொழிகளை உதாரணமாகக் காட்டியிருக்கலாம். அவ்வாறு காட்டாமைக்குக் காரணம் புலப்படவில்லை—ஒருகால் தொல்காப்பியர் காலத்து வழங்கி இக்காலத்து வழக்கு வீழ்ந்த சொற்கள் உள எனப் பின்னர்த்தாம் அமைதி கூறுவதற்கு இஃது முன்மொழித்து கோடலாகவும் இருக்கலாம் இது நிற்க.

அடுத்த நூற்பா :— [அவற்றுள்]

மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்

பொருள் — மேற்கூறிய ஞ ந ம வ க்களுள் மகரஒற்றின் முன்னர் (யகரமேயன்றி) வகரமும் வந்து மயங்கி நிற்கும்.

எ-டு:— திரும் வாழ்க்கை (இதுவினைத்தொகை) நிலம்வலிது—தரும் வளவன் என வரும்.

உம்மை இறந்தது தழீஇயஎச்சஉம்மை, இந்நூற்பாவின் முதற்கண் 'அவற்றுள்' என நின்ற கூன் ஏடெழுதுவோரால்விடப்பட்டிருத்தல் வேண்டும். என்பது மெய் 24, 26 ஆம் நூற்பாக்களின் அமைப்பை நோக்கின் புலனுகும்.

அடுத்த நூற்பா :

யாழ வென்னும் புள்ளி முன்னர்
முதலாகெழுத்து ஙகரமொடு தோன்றும்

பொருள் :— (மெய்ம்மயக்குடனிலை தெரியுங்காலை) யரழ என்னும் புள்ளி எழுத்துக்களின் முன் மொழிக்கு முதலாகும் என மேற்கூறப் பெறும் க த ந ப ம ச வ ய ஞ என்னும் ஒன்பது மெய்களும் (மொழி முதலாகாமல் புணர்ச்சி இயல்பால் தோன்றும்) ஙகர மெய்யும் வந்து மயங்கும்.

ஙகரம் ஒற்றுயல்லாது உயிர்மெய்யாக வாராமையின் பிரித்தோதப் பட்டதென்க. ஒடு—எண்ணுப்பொருளில் வந்த இடைச்சொல் இதனை

என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி
ஒன்றுவழி யுடைய எண்ணினுட் பிரித்தே
(சொல்: இடை 46)

என்றதனுல் அறியலாம். அதனுன் ஈண்டு முதலாகெழுத்தோடு எனக் கூட்டப்பட்டது. உரையாசிரியன்மார் இவ்வொடுவை உடனி கழ்ச்சிப்பொருளில் வந்ததாகக்கொண்டு பொருள் கூறினர். ஙகரம் ககரத்தோடன்றிஏனையவற்றேடு வாராதென்பதை அவர்ஓர்ந்திலர்.

எ.டு:—

ய்	ர்	ழ்
ஆய்கவின்	ஆர்கலி	ஆழ்கடல்
தூய்து	சார்தல்	சூழ்தல்
பாய்நர்	தேர்நர்	வாழ்நர்
ஆய்ப	சேர்ப	வாழ்ப
தூய்மை	நேர்மை	தாழ்மை
கொய்சிறை	ஓர்சொல்	பாழ்சுரம்
மெய்வழி	தேர்வது	ஊழ்வினை
பாய்ஞெண்டு	ஊர்ஞெண்டு	வாழ்ஞெண்டு
செய்யவள்	போர்யானை	வீழ்யானை
வேய்ங்குழல்	ஆர்ங்கோடு	பாழ்ங்கிணறு

எனவரும், வேய்கடிது--வேர்சிறிது முதலாய புணர்மொழிகளும் ஆம் ஙகரம் புணர்ச்சி விகாரத்தால் தோன்றிக் ககரத்தின் முன் நிற்ற லன்றி மொழிக்கு முதலாகமையின் உயிர்மெய்யாகி நில்லாமையின் வேய்ங்குழல் ஆர்ங்கோடு — பாழ்ங்கிணறு எனக்காட்டப்பட்டது. எனவே வேய்ஙனம் — வேர்ஙனம் — வீழ்ஙனம் எனக்காட்டுதல் நன்னூல் முதலாய பின்னூல்களின் தவருய வழக்கேயன்றித் தொல்காப்பியநெறி ஆகாதென்க.

அவ்வாருயின் அங்ஙனம் — இங்ஙனம் — உங்ஙனம் — ஆங்ஙனம்—ஈங்ஙனப்—ஊங்ஙனம் (எங்ஙனம்) யாங்ஙனம், எனச் சுட்டு வினக்களையடுத்து வரும் ஙனம் என்பதை வருமொழியாக வைத்துப் புணர்த்திக் கூறுதள் எவ்வாறு பொருந்தும் எனின் ? பொருந்தாது. என்னை?

இவை சுட்டு வினக்களின் அடிப்படையிற் பிறந்த தனிச் சொற்களேயன்றி நிலைமொழி வருமொழியாக நின்று புணர்ந்த

ஒட்டுச் சொற்கள் அல்ல. எவ்வாறெனின்? உயர்திணை—அஃறிணை யாய ஐம்பாற் பெயர்களுள்; அவன் அவள் அவர் அவை அது. அவ்—அவை, யாவன் யாவள் யாவர் யாவை முதலியவை சுட்டு வினாக்களை அடிப்படையாகக்கொண்டு பிறந்து ஒருசொல்லாய் நிகழ் வதைப்போல, அங்கு—இங்கு—உங்கு. ஆங்கு—ஈங்கு—ஊங்கு—ஆண்டு — ஈண்டு — ஊண்டு — யாண்டு — ஆண்டை — ஈண்டை ஊண்டை—யாண்டை, என இடப்பொருளைச் சுட்டி வரும் பெயர்ச் சொற்களும். வினாச்சொற்களும், சுட்டு முதலாய இகர ஈற்றுச் சொற்களும் எகர முதல் வினாவின் இகர இறுதிச் சொற்களும் (எழு—159) ஒருசொல்லாக வரும் தனி மொழிகளே என்று ஆசிரியர் கூறுவதை யறிவோம்.

அவ்வாறே அங்ஙனம் இங்ஙனம் முதலாய சொற்களும் சுட்டு வினாக்களின் அடிப்படையிற் பிறந்து தன்மைப் பொருளில் வழங்கும் பெயர்ச் சொற்களாதலின் இவையர்வும் ஒரு சொல்லே எனத் தெரியலாம்.

அன்றி இவற்றை நனம் எனப்பிரிப்பின் ஆண்டு—ஆண்டை —ஆங்கு—யாங்கு என்பவற்றையும் பிரித்தல் வேண்டும். இவற்றை எவ்வாறு பிரித்தல் ஒல்லும். ஒல்லாது எனவே. அங்ஙனம் இங்ஙனம் முதலியவைகளும் பிரிப்பப்பிரியா. ஒருசொல்லெனவே கொள்ளப்படும். இவற்றை "மருவின் பாத்திய" என்றும் "புணரியல் நிலையிடை உணரத் தோன்ற," என்றும் ஆசிரியர் அறிவுறுத்தினர் என்க.

இப்பொருள் நுட்பம் ஒராத நன்னூலார் அவன் இவன் யாவன் முதலாய ஒருசொற்களைப் பகுபதமாகக் கொண்டு இலக் கணங் கூறப்புக்கமையின் அங்ஙனம் முதலியவற்றையும் நிலைமொழி வருமொழியாகப் பிரித்தோதும் கடப்பாட்டிற்குள்ளானர்—ஆயினும் ஙனம் என்பது புணர்மொழிக்கண் அன்றி யாண்டும் தனித்து வராமை நோக்கிச்

சுட்டியா எகர வினாவழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலாகும்மே. — (நன்.) என்றும்

சுட்டுவினாப் பெயர்களுள் அகர இகர எகரங்களின் பின் வகரமே உடம்படுமெய்யாக வருதலை நோக்கி

"எகர வினா முச்சுட்டின் முன்னர்
உயிரும் யகரம் எய்தின் வவ்வும்" எனவும்

விதிகற்பித்துக் கூற வேண்டியவராயினர் என்க.

இவற்றுள் எதனையும் ஓராமல் அங்ஙனம் இங்ஙனம் என்ப வற்றை அங்கனம் இங்கனம் என்னும் சொல்லாக இருக்கவேண்டு மெனக் கருதி மாற்றி எழுதிக்கொண்டு அமைதியுற்றாரும் உளர், அவர்தாம் "கனம்" என்பதற்குத் தன்மை என்னும் பொருள் இரு வகைவழக்கிலும் காணப்படாமையைக் கண்டிலர் போலும்.

இனி

ஆங்கனம் விரிப்பின் அளவிறந்தனவே

பாங்குற உணர்ந்தோர் பன்னுங்காலை (தொல்-செய்-51)

யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம் (புறம்-7)

எனத் தொல்காப்பயத்துள்ளும் புறத்துள்ளும் வருதலின் ஆங்கனம் என்பதே பிற்காலத்து ஆங்ஙனம் எனப் பிறழ்ந்ததென்பார் கருத் தினை நோக்குவோம். இவ்விரண்டு சொற்களும் பொருளாற் சிறிது வேறுபாடுடையவை. ஆங்கனம் என்பது ஆங்கு + அன்ன + அம் எனப் பிரிப்பப் பிரியும் புணர்மொழியால் ஒருசொல் நீர்மைப்பட்டு நிற்பதாகும்.

ஆங்கென்பது இடத்தன்மையையும் அன்ன என்பது உவமத் தன்மையும் சுட்டி இணைந்து இடம் பண்பு செயல்பற்றிவரும் 'அம்' என்னும் விகுதி இடைச்சொல்லோடு புணர்ந்து அவ்வாறு (போல) என்னும் பொருளில் நிற்கும். ஆங்கு என்பதற்கு 'ஆன்' என்பதும் அன்ன என்பதற்கு 'அன்' என்பதும் அடிச் சொற்களாம்; 'அம்' என்பது அகம் என்பதன் இடுங்கிய சொல்லாய் இடப்பெயர் விகுதி யாகவும், ஆகும் என்பதன் இடுங்கிய சொல்லாய்ப் பண்பு முதலாய பெயர்களின் விகுதியாகவும் வரும்.

குன்றம்— பாக்கம் என இடத்தையும் நோக்கம் நீக்கம் அறம் மறம் அச்சம் எனப் பண்பு முதலாயவற்றையும் அம் விகுதி சுட்டி வருதல் காண்க.

"கண்ணே கொடிது யாழ் கோடு செவ்விதாங் கன்ன

வினைபடு பாலாற் கொளல்"

என்னும் குறட்பாவில் இச்சொல் விரிந்து நிற்றலைக் காண்க.

மேலும் கனம் என்பது தனம் என்பதன் திரிபெனக் கருதுதலும் பொருந்தாது. தனம் என்பது தன்மை என்னும் பண்புப் பெயருள் மை விகுதிக்கு மாறாக அம் விகுதிபெற்று வந்த சொல் ஆயினும் மடத்தனம் — தடித்தனம் என உலக வழக்கின்கண் அன்றிச் சான்றோர் வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் இஃது பெரும்பான்

மையும் வாராமையறிக. மற்றும் தனம் என்பது கனும் எனத் திரிதற்கும் வாய்ப்புண்டா என்பதும் நோக்கத்தக்கது.

இனி அங்ஙனம் என்பது பிரிப்பப்பிரியா ஒட்டுச் சொல்லாய் அத்தன்மை எனும் பொருள் தருவதாகும். ஒருகால் இச்சொல் அவ்வனம் (அவ்வண்ணம்) என்பதன் போலியாக வந்திருக்கலாம் எனினும் ஆயத்தக்கது. அங்ஙனம் என்னும் சொல் ஆசிரியர் காலத்து வழங்காதிருப்பின் ''மெய்நிலைச் சுட்டின்'' என்னும் நூற்பாவில் எல்லா எழுத்தும் தம்முன் தாம்வருஉம் ர ழ வ ல ங் கடையே எனக் கூறியிரார், ''ஙரழ வல்ஙகடை'' எனக் கூறியிருப்பார். ஆதலான் ''அங்ஙனம்'' முதலியவை ஆண்டு—ஈண்டு என்றாற்போல ஒரு சொல்லேயாம் என்பதே நேரிது.

இதுகாறுங் கூறியவாற்றால் ''ஙனம்'' என்றொரு தனிச்சொல் இல்லை என்பதும், ஆண்டு—ஆண்டை என்பவற்றை நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமைபோல அங்ஙனம் இங்ஙனம் முதலியவும் பிரித்துப்புணர்க்கப்படா. அவை ஒரு சொற்களே என்பதும், அங்கனம் — இங்கனம் எனக் கருதிக்கொள்ளுதல் பொருந்தா வழக்கென்பதும்—நன்னூலை அளவையாகக் கொண்டு இடைக்கால—பிற்காலத்தவர் கூறுவன தமிழ் மரபிற்கும் தொல்காப்பியநெறிக்கும் ஏற்புடையவாகா என்பதும் பெறப்படும்.

அடுத்த நூற்பா:

மெய்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன் தாம் வருஉம் ரழவலங்கடையே

பொருள் :— எல்லா மெய்யெழுத்துக்களும் தம் வடிவு நின்று மயங்குதலைக் கருதி ஆராயின் ரகரமும் ழகரமும் அல்லாத ஏனைய பதினாறும் தமக்கு முன்னர்த் தாம் வந்து மயங்கி நிற்கும்.

எ-டு:— மக்கள் — இங்ஙனம் — தொச்சி — மஞ்ஞை — பட்டினம்
அண்ணல் — தித்தன் — வெந்நீர் — கப்பல் — வெம்மை
வெய்யன் — மல்லல் — தெவ்வர் — வள்ளி — கொற்றன்
கன்னல் எனவரும். மடக்கொடி — கடுக்காய் என்றாற் போலப்புணர் மொழியுள்ளும் வரும்.

(தொடரும்)

சிலம்பியம்

சி. கோ. தெய்வநாயகம் M. A., M. Phil.,

[சென்ற இதழ் 196-ம் பக்கத் தொடர்ச்சி]

இனி குரவைப் பாடல்கள்:

ஆய்ச்சியர் குரவை:

தம் சேரிக்கு உற்பாத சாந்தியசக மாதரி முதலாயுள்ள ஆய்ச்சியர் குரவைக் கூத்தாடின முறைமை.

குரவை என்பது கூறுங்காலைச் செய்தோர் செய்த காமமும் விறலு மெய்த வுரைக்கு மியல்பிற்றென்ப எனவும், குரவையென்ப தெழுவர் மங்கையர் செந்நிலை மண்டலக் கடகக் கைகோத் தந்நிலைக் கொட்ப நின்றாடலாகும் எனவுஞ் சொன்னாராகலின் இதுவும் ஆய்ச்சியரிடத்து நிகழ்தலான் ஆய்ச்சியர் குரவையெனக் கூத்தாற் பெற்ற பெயர்.

குன்றக் குரவை.

மதுவொழுக மலர்ந்த வேங்கையினையுடைய குறத்தியர் இவளை (கண்ணகியை) வேங்கை நிழற்கண் கண்டதற்கு உற்பாத சாந்தியாக முருகவேளை நோக்கி அக்குன்றின்கண் ஆடிய குரவையும்.

ஆய்ச்சியர் குரவையிற் கூறியது இதற்குங் கூறுக.

குரவை என்பது ஒருவகை ஆடற்கேற்ப பாடப்பட்ட பாடல் வகை என்பதே அடியார்க்கு நல்லாரின் கருத்தாகும், இனி மாலை என்பதற்கு.

துன்ப மாலை,

அங்ஙனம் அவன் (கோவலன்) கொலையுண்ட தீத்திறத்தைக் கண்ணகி கேட்டுத் துன்புற்ற இயல்பும்

இதுவும் ஊர்சூழ்வரியும் சிறிது கதை நிகழ்ச்சியுளவெனினும் மருட்கையென்னு மெய்ப்பாடும், அவலம் அரற்றுக் கவலை கையாறென்னு மிவையும் நிகழ்தலினான் இதனை மாலை யென்றாரெனக் கொள்க.

வஞ்சினமாலை:

அங்ஙனந் தானுரைத்த வழக்குந்தோற்று உயிருந்தோற்ற நெடுஞ்செழியன்றேவியை நோக்கிக் கண்ணகி வஞ்சினங் கூறிய இயல்பும்,

வஞ்சினமாவது பேற்கோள். இக்கலிவெண்பபாட்டும் பத்தினித்தன்மைத்தாகிய ஒருபொருளை கருதிக் கூறிய இயல்பை யுடைத்தாகலின் மாலையென்றார்'' எனப் பொருள் காட்டுவர்.

மாலை என்ற பாடற்கோப்பு பலபாடல்களால் குறிக்கப்படும் ஒரு செயல் அல்லது பொருளைப்பற்றியதாகும். இதன் நுண்மை யிளை ஓர்ந்தே அடியார்க்கு நல்லார் இயல்பினைக் குறித்த பாடல் கள் மாலை எனப்படும் எனப் பொருள் கூறினார்.

இனி இப்பொருண்மைகளின் நுண்மை காணலாகும்.

பாடல் ; வாழ்த்து, உரை, பாடல் முதலியவற்றை உரைப்பது,

வரி : உரையாடல், எடுத்துக்கூறல், விளக்குதல்; முதலியவற்றை நாடகப்பாங்கில் பாட்டால் உரைப்பது.

குரவை: ஆடற்குத் தக பாட்டிசைப்பது.

மாலை : பொருள் இயல்பு கூறும் பல்வகைப் பாடல்கள். இந் நான்குமே கதை கூறாத இயல்பினவாகும்; 'பாட்டின் திறங்களேயாகும்.

இனி இப்பாட்டுத் திறங்கள் மேலெட்டுப் பகுதியுளும் ஆமாறு உணர்த்துவாம்.

1. மங்கல வாழ்த்துப்பாடல் :

திங்களை, ஞாயிற்றை, மாமழையை, பூம்புகாரைப் போற்றும் போற்றியுரைகளும், புகார்ச் சிறப்பு, கண்ணகி கோவலன் இயல்பு களை எடுத்துக்கூறும் ஏத்திக்கூறும் ஏத்தலுரைகளும், காதலற் பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக என வாழ்த்துமுரையும், ஆங்கு, அதனால், அவளுந்தான், அவனுந்தான், அவரை, அவ்வழி எனும் தனிச்சொற்கள் இடையிட்டு உரையிடையிட்ட பாட்டுக்களை, உருப்படுத்தியுள்ளமையும் இப்பகுதியின் சிறப்புகளாகும்,

2: கானல்வரி :

ஆற்றுவரி, முகமில்வரி, படைப்புவரி, முகமுடைவரி, சாத்துவரி, கானல்வரி, நிலைவரி, முரிவரி, திணைநிலைவரி, மயங்குதிணை நிலைவரி, சாய வரி, போன்ற பல்வகை வரிப் பாடல்களையும், கட்டுரை என்ற பகுதியில் உரைப்பகுதியினையும், எனக்கேட்டு (52—கா. வ.) ஆங்கு எனும் தனிச் சொற்களையும் பெற்று உரையிடையிட்டு வரிப்பாடற்குச் சான்றாயுள்ளது,

3. வேட்டுவ வரி :

கண்ணகியைப் போற்றுதலும், கொற்றவையைப் பரசுதலு மாக போற்றிப்பாடல்களைக் கொண்டுள்ளது இதன்கண் கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென்றமிழ்ப்பாவை, செய்தவக் கொழுந்து, திருமாமணி முதலியன கண்ணகியையும், அமரி, குமரி, கவுரி, சமரி, நீலி முதலியன கொற்றவையினையும் போற்றிப்புகழும் புகழ் உரைகளாகும். இதனை உரைப்பாட்டுமடை எனவும் புறத் திணை புகலும் பகுதியினை துறைப்பாட்டுமடை எனவும் இப்பகுதி உரைக்கின்றது. ஆங்கு எனும் தனிச் சொல்லும் இடையே இடம் பெற்று உரையிடையிட்ட பாடல்களை இனங்காட்டுகின்றன.

உரைப்பாட்டுமடை என்பது உரைப்பாட்டை நடுவே மடுத்தல் என்பதாகும்.

துறைப்பாட்டு மடை என்பது துறைப்பாட்டுக்களை நடுவே மடுத்தல் என்பதாகும்.

4 ஊர்சூழ்வரி:

கண்ணகியின் அவலக் கூற்றுக்களும், மதுரை மக்களின் கழி விரக்கக் கூற்றுக்களும், கோவலன் கூற்றுமாகப் பாடல்கள் அமைந் தன. அனைத்தும் மெய்ப்பாடு உணர்த்துவன.

இவைக்குறியே அரும்பதவுரைகாரர்' பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒருநெறியன்றி மயங்கச்சொல்லப்பட்ட எட்டனி யல்பும், ஆறனியல்பும், பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு. இயல்பும் முடமுமாக முடிந்து கருதப்பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும். அதுதான் தெய்வஞ்சுட்டியும் மக்களைப் பழிச்சியும் வரும் என்றார்.

5. ஆய்ச்சியர் குரவை:

உரைப்பாட்டுமடை, கருப்பம், கொளு, எடுத்துக்காட்டு, கூத்துள் படுதல், பாட்டு, ஒன்றன் பகுதி, ஆடுநர்ப் புகழ்தல், உள் வரி வாழ்த்து, முன்னிலைப் பரவல், படர்க்கைப் பரவல், முதலிய, உரைப்பாடல்களையும், ஆடற்பகுதிகளையும் கொண்டது.

6. குன்றக் குரவை.

உரைப்பாட்டுமடை, கொளுச் சொல், பாட்டு மடை, எனும் ஆடற்பகுதிகளைக் கொண்டுள்ளது. இவ்வகையில் குரவைப் பாடல் கள் சிலம்பில் இடம் பெற்றுள்ளன.

7. துன்பமாலை:

கண்ணகியுற்ற அவலம், அச்சம், வெகுளி, இவற்றதியல் போடு, ஆங்கு, அவடான், எல்லாவோ, சொலினது, எனக்கேட்டு, காணிகா எனுந் தனிச் சொற்களையும் பெற்று வந்துள்ளது.

8. வஞ்சினமாலை:

கண்ணகியாரின் வெ கு ளி யை யு ம், பெருமிதத்தினையும் ஒருங்கே காட்டுகின்ற பாடல்,

இவ்வணம் இவ்வெட்டுப் பகுதிகளும் பாடல்கட்குரிய தனித் திறத்துடன் உரையிடையிட்டனவாக, செய்யுளால் இணைவு பெற்றனவாக உள்ளமையே சிலம்பு அதிகாரத்தை நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாகிய மணியாரமாக்கி மகிழ்வித்துள்ளது.

இவற்றில் வேறாக உரை, என்பது குறித்து சிந்திக்க வேண்டியுளது மரபுத் தடங்கள் குறித்த உரை, வசனம் என்றழைக் கப்படும் உரைநடையேயாகும். ஆயின் இவ்வாய்வுவழி சிந்திக்க, வாழ்த்துரை, ஏத்துரை, போற்றுரை விளக்கவுரை, ஏச்சுரை, பேச்சுரை, காட்சியுரை, போன்ற நிகழ்ச்சி விளக்கவுரைகள், காதலற்பிரியாமற் கவவுக்கை ஞெகிழாமல் தீதறுக, கள்வனோ அல்லன், கருங்கயற்கண் மாதராய் ஒள் ளெ றி யு ண் ணு மிவ்வூர்'' போன்ற உரைகள் கலந்த — இடையிட்ட பாட்டுடைச் செய்யுள்தான் இவ்வுரை காட்டும் உரை என்ப தாயும் சிந்திக்கவேண்டியுள்ளது, வரிப்பாடலிலேயே இத்த கைய உரை இடையிட்டு,

> ''தம்முடைய தண்ணளியும் தாமும் தன்மானிறேரும்
> எம்மை நினையாமல் விட்டாரோ விட்டகல்க
> அம்மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்,
> நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்

என உள்ளமை அறியத்தக்கதாகும்.

இவைதவிர ஏனைய காதைகளுள்ளும் ஓராற்றான் இவ்வுரை யிட்ட பாடற் பகுதிகள் இடம்பெற்று இளங்கோவின் குறிக்கோளை நாட்டுவதாக அமைந்துள்ளன. இதனை சிலப்பதிகார நூற்கட்டுரை கீழ்வருமாறு விளக்குகின்றது.

... இழுக்கா யாப்பி னகனும் புறனும்
அவற்று வழிப்படூஉஞ் செவ்வி சிறந்தோங்கிய
பாடலு மெழாலும் பண்ணும் பாணியும்
அரங்கு விலக்கே யாடலென் றனைத்தும்
ஒருங்குடன் தழீஇ யுடம்படக் கிடந்த
வரியுங் குரவையுஞ் சேதமு மென்றிவை
தெரியுறு வகையாற் செந்தமி ழியற்கையில்
ஆடிநன் னிழலி னீடிருங் குன்றங்
காட்டுவான் போன்ம் கருத்து வெளிப்படுத்து ...
(நூ. க. 8—16)

சான்றுக் குறிப்புகள் :—

1. சிலம்பு : பதிகம் — 60
2. ,,
3. ,,
4. சிலம்பு பதிகம் — 60
5. ,,
6. சிலம்பு : பதிகம் — 87
7. ,,

பரிப்பெருமாள் — ஒரு மதிப்பீடு

தகை அணங்குறுத்தல்

பேராசிரியர் கு. சிவஞானம் எம். ஏ.

'' தலைமகனும் தலைமகளும் எதிர்ப்பட்ட இடத்து'' என்று, இவ்வதிகாரத்திற்கு விளக்கத்தைத் தொடங்குகின்றார், பரிப்பெருமாள்.

பொழிலில் விளையாடும் விருப்பத்துடன் வந்த தோழியரை நீக்கித் தனியாக நிற்கும் தலைவியும், வேட்டையாடும் விருப்பத்துடன் வந்து தோழனைப் பிரிந்து தனித்துவந்து தலைவனும் ஒருவரை ஒருவர் எதிர்ப்பட்டபோது இது நிகழும் எனப் பரிமேழலகர் கூறுகின்றார். இவ்வாறு தலைவனும், தலைவியும்

இன்னின்ன காரணத்திற்காக வந்து தனித்து எதிர்ப்பட்டனர் என்ற விவரம் பரிப்பெருமாள் உரையில் இல்லை.

தலைவனும், தலைவியும் பிறகாரணங்களினாலும் எதிர்ப்படலாம். தொல்காப்பியத்திலும் 'கிழவனும் கிழத்தியும் காண்ப' என்றே கூறப்பட்டு உள்ளது. இன்னின்ன காரணங்களினால் வந்து எதிர்ப்பட்டுக் காண்பர் என்று கூறப்படவில்லை. எனவே இவற்றைக் கருத்தில்கொண்டுபரிப் பெருமாள் 'தலைமகனும், தலைமாளும் எதிர்ப்பட்ட இடத்து' என்று பொதுவாகக்கூறி உள்ளார், எனக்கொள்ள வேண்டும்.

இனி, 'தலைமகளது கவின் தலைமகனை வருத்துதலும், தலைமகனது கவின் தலைமகளை வருத்தலும் என அணங்குறுத்தல் என்பது இருவர் அழகாலும் நிகழ்கின்றது எனக்கூறி உள்ளார், பரிப்பெருமாள்.

அவள் வனப்புத்தன்னை வருத்த முறுவித்தலைச் சொல்லுதல் என்று பரிமேலழகர் கூறுகின்றார். எனவே, பரிமேழலகர் கருத்துப்படி 'தகை' என்பது தலைவியின் அழகை மட்டும் குறிப்பது ஆகும்.

'நாயகியை நாயகன் கண்டு அனுபவித்தல்' என்ற பரிதியார் விளக்கத்திலும் தலைவியின் அழகு மட்டுமே குறிக்கப்படுகின்றது.

ஆனால் இருவர் அழகும் மாற்றி, மாற்றி இருவரையும் அணங்குறுத்துகின்றது என்பது பரிப்பெருமாள் கருத்தாகும்.

உண்டார்கண் அல்லது அடு நறாக் காமம் போல்
கண்டார் மகிழ் செய்தல் இன்று (1090) என்ற குறள் 'தலைமகனைக் கண்டுழி வருத்தமுற்றுக் கருதியது' என்று மணக்குடவர் கூறுகின்றார், இதன்படி தலைமகன் அழகு தலைவியை வருத்தி உள்ளது.

எனவே, அதிகாரத்திற்குப் பொதுவிளக்கம் கூறுகின்ற பொழுது தலைவி அழகு தலைவனையும், தலைவன் அழகு தலைவியையும் அணங்குறுத்தியது என்று பரிப்பெருமாள் கூறுகின்றார்.

பிறர் தலைவியின் வனப்புத் (தகை) தலைவனை வருந்தியதாக மட்டுமே கருதி விளக்கம் கூறினர். ★

பாண்டிய நாட்டுச் செப்பேடுகளில் விண்ணப்பங்கள்

கு. அழகேசன் ஆய்வாளர், காமராசர் பல்கலைக் கழகம்,

'தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாடு' — என மாணிக்கவாசகரால் சிறப்பிக்கப்பட்டது பாண்டிய நாடு. கிறிஸ்துப் பிறப்பதற்கு முன்பும் அதன் பின்பும் சிற்றரசர்களாகவும் பேரரசர்களாகவும் ஆண்டவர்கள் பாண்டியர்கள், 26ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை வாழ்ந்து முடிந்த அவர்களைப் பற்றிய செய்திகள் சோழர்களுக்குக் கிடைத்த அளவிற்குக் கிடைக்கவில்லை. கல்வெட்டாலும் இலக்கியங்களாலும் பாண்டியரைப்பற்றிய செய்திகள் அருகிக் காணப்படுகின்றன,

கிடைத்திருக்கிற செப்பேடுகளில்கூட, புராணச் செய்திகள் மட்டுமே மிகவும் விரிவாக்கப்பட்டுள்ளன. ஆகையால் அவர்களின் சமுதாயப் பண்புகள் குறித்த பணிகளைச் செப்பேடுகளின் வழி அறியலாமென்பது சற்றுக் கடினமான ஒன்று.

பாண்டிய நாட்டுச் செப்பேடுகளில் மன்னர்களின் பூர்வீகம் பற்றிய செய்திகள் அதிகம் உண்டு. அவர்களின் தானங்குறித்த விவரங்கள் குறைவு; குறைவான அவ்விவரங்களுள் மன்னர்களிடம் முறையிடும் அல்லது விண்ணப்பிக்கும் போக்குமட்டுமே இக்கட்டுரையில் ஆயப்படுகின்றது.

கிடைத்திருக்கிற பாண்டியர் செப்பேடுகள், பத்தாகும், அவை வேள்விக்குடிச் செப்பேடு, சீவரமங்கலச் செப்பேடு, சின்னமனூர்ச் சிறிய, பெரிய செப்பேடு, தளவாய்புரச் செப்பேடு சிவகாசிச்செப்பேடு ஆய்குல மன்னர்களின் நான்கு செப்பேடுகள் என்பன அவற்றுள் முக்கியமானவையாகும். இவற்றுள் நான்கு செப்பேடுகளில்மட்டுமே மன்னர்களிடம் மற்றவர்கள் சென்று முறையிடும் நெறி விளக்கப்பட்டுள்ளது. அவற்றை நிரல்பட ஆய்வோம்.

பாண்டிநாதன் என்னும் பெயர்கொண்ட நெடுஞ்சடையனைக் குறித்து சீவரமங்கலச் செப்பேடு 93 வரிகளில் வரலாற்றுச் செய்திகளைத் தெரிவிக்கிறது. வேணாட்டு மன்னனிடம் போர் செய்தது. இலங்கை அரண் போன்றிருந்த விழிஞம் என்னும் ஊரை அழித்தது. கரவந்தபுரத்திலே கோட்டை கட்டியது. மதுரையில் அரசோச்சியது—போன்ற செய்திகளை 80 வரிகளால் பகரும். பணக்காரனாகிய அரிகேசரியார், செப்பேட்டில் பொறித்துள்ளார்.

இச்செப்பேட்டில் மன்னனிடம் / சென்று முறையிடுங்குறிப்பு, நான்காம் ஏட்டில் காணப்படும். மன்னன் மகத நாட்டில் தங்கியிருக்கும் போது சப்தாளி ஊரைச் சார்ந்த பிராமணர்கள் திருவேழுச்சி காணவருகின்றனர். சாஸ்திர சாகரங்களை நிலைகண்டுணர்த்த ஸஜ்ஜத பட்டன் எம்பவர் தனக்கு, மீயாட்சி காராண்மை நீக்கி, பிரமதேயமாக இவ்வூரின் எல்லைப் புறத்தே தானமொன்று நல்க வேண்டுமென விண்ணப்பிக்கிறார். ஆகையினால்—பகையரசனின் வலி தொலைத்த களக்காடு வைத்யகுலமூர்த்தி எயினனை, மன்னன் ஆணத்தியாக நியமித்தான்.

அவன் வழியாகப் பட்டரைப்பற்றிய மேல் விவரங்களை அறிந்துகொண்டு ஸஜ்ஜத பட்டனுக்கு நிலம் தகனம் செய்கிறான். தானம் செய்கிறபோது வேலங்குடி எனும் ஊரைச் சீவரமங்கலமாக மன்னன் மாற்றுகிறான். பட்டரின் விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, பரிவர்த்தனை செய்யலாம் என்ற நிலை ஏற்படும்போது தான ஊர்களின் பெயர்களை மேற்குறித்தவாறு மாற்றியருளினர். இராஜசிம்மனின் செப்பேட்டில்

> நற்செய்கை புத்தூ ரதனைமந்தர கவமங்கலமென்று தன்பெயரிட்டுக் காராண்மை மீயாட்சி உள்ளடங்கக் கண்ணடகுளி ஏகபோக பிரமதேயமாக நன்கு கொடுத்தருளினன்.
>
> (சின்னமனூர் பெரிய சாசனம்—வரி. 158—160)

என்று குறிப்பு விளக்கப்படுகிறது. இதிலிருந்து ஒரு கருத்தை அறியலாம் பூமிதானம் செய்யப்படுகிறபோது பாண்டியர்கள் ஊர்ப்பெயர்களை மாற்றித் தானம் நல்கினர் என்பதுவே அக்கருத்து.

சின்னமனூரில் சிறிய சாசனத்தின் மூன்றும் ஏடு காணப்படவில்லையாதலால் விண்ணப்பித்தவன் யார்? விண்ணப்பித்ததின் விளைவாய் பூமிதானம் செய்யப்படுகிற போது ஊர்ப்பெயர் மாற்றம் செய்யப்பட்டதா? என்னும் விவரங்கள் அறியக்கிடைத்தில.

தளவாய்ப்புரச் சாசனத்தில் இவ்விவரங்கள் நன்கு விளக்கப் பட்டுள்ளன. ஆசி நாட்டைச் சார்ந்த ஸ்ரீமங்கலம் என்னும் ஊரைப் பன்னிரண்டு பிராமணர்களுக்காகத் தானம் செய்யப்பட்டதாகத் தளவாய்ப்புர சாசனம் கூறும்.

ஸ்ரீமங்கலத்துடன் மற்றோர் ஊரும் காடக சோமயாஜிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வூர் சோமாசிக்குறிச்சி என அழைக்கப்

படுகிறது. சிலநாள் கழித்துத் தானம் வழங்கிய இப்பகுதியை நான்காம் வருணத்தார் அபகரித்தனர். அப்பொழுது நடந்த தாக்குதலால் செப்பேடு தொலைந்துவிட்டது. அதனால் சோமயாஜியாரின் குடும்பத்திற்குத் தானம்பற்றிய உரிமம் கிடைக்கப்பெறவில்லை. இவ்வேளையில் பராந்தக வீரநாராயணனுக்கு 45 ஆம் ஆண்டு நடக்கும் தருணத்தில், ஆசி நாட்டிற்குத் திக்விஜயம் செய்யவிழைகிறான்.

இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, பறிக்கப்பட்ட தானத்திற்கு பாத்தியதை உடைய வம்சத்தார் ஆக்ஞப்தி இளையாநக்கன் வழியாக மன்னனிடம் வேண்டுகோள் விண்ணப்பம் செய்கின்றனர்.

வரி: 139. எரிற்செப்பேட் டோடு குடுத்தவன் ஆகிய இவ்வூரிரண்டின் செப்பேடு மறக்கொட்டில் இழந்து போயினவென்றும் ஏதமில் சோமாசிக்குறிச்சிச் செழுந்தகைய நிலத்துப்படும் நிலத்தை

வரி: 140. மீனவன் வீரநாராயணற்கு ... அருளறிந்து விண்ணப்பித்து மதுர (இர) தாநல்லூர் எனும் வளம்பதி சோமாசிக்குச்சி அதன் மேலபுரவேற்றி ஆங்கதுள் திருமங்கலமும்

வரி: 57. உடன்கூடப் பிடி சூழ்வித்து அறியக் குடுத்தருளினன்

என்றவாறு தளவாய்புரச் செப்பேட்டில் ஐந்தாம் எட்டுப் பகுதியில் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து, பராந்தகன் குறையறிந்து சோமாசிக்குறிச்சியையும் ஸ்ரீமங்கலத்தையும் ஒன்றாக்கி மதுரஸ்தான ஸத்கிராமமாகப் பெயர் மாற்றி மீண்டும் அவ்வமிசத்தார்க்குத் தானம் கிடைக்கச் செய்தான் என அறியலாம். மேற்காட்டிய செப்பேடுகளின் அமைப்பிலிருந்து வேறுபட்டமை பிறகு. வீரபாண்டியனின் சிவகாசிச் செப்பேடு. மன்னவன்தன் மூன்றாம் ஆட்சியாண்டில் செல்லூரில் தங்கியிருக்கிறான். கவிதை செய்யவல்ல வாசுதேவ பீதாம்பர பட்டன் தனக்கு பிரம்மதேயம் வேண்டுமென விண்ணப்பிக்கிறான். கவிதை வழியாகக் கேட்டுணர்ந்த மன்னனும் அவனது விண்ணப்பத்திற்கு மதிப்பளிக்கிறான். செப்பேட்டின் நடுப்பகுதியில் இதுபற்றிய செய்தி விரிக்கப்படுகிறது.

வரி. 62. பீதாம்பர பட்டனென்ற மறை

வரி: 63. வாழ்தனை மதித்தருளி நீய் செய்கென மற்றவனு

வரி: 64. மனமகிழ்ந்து விதித்தமைந்த அனுஷ்டுப்பின் விழுப்ப நோக்கி மிக மகிந்து

வரி. 68. புறநாஞ்சிக்கோவால் இருபூ விளைவது நீர்நிலன் மூவேலியும் குடுயிருக்.

வரி. 70. முருகூர்—ஏகபோக பிரமதேயமாய் பிடிசூழ்ந்து ஊராண் மையில் வேறொவிளக்கி நாட்டாண்மையோடு உடன் கட்டிக் காராண்மையும்

வரி: 72. மீ சாய்சியும்—மறையோலையும் தனித்தனியே சமைப்பித்து

— பட்டருக்குத் தானம் செய்ததாகச் சிவகாசிச் செப்பேடு கூறுகிறது. பிரமதேய தானம் வேண்டி விண்ணப்பிக்கும் போது கவிதை நயம் தோய்ந்து பாடிய காரணத்திற்காகப் பட்டரின் விண்ணப்பம் மன்னரின் விண்ணப்பம் மன்னரின் கவனத்தை நாடிய தாகக் காட்டிய செப்பேடு சிவகாசிச் செப்பேடாகும். பிற பாண்டியர் செப்பேடுகளிலும் ஆய்குல மன்னர்களுக்குரிய சாசனங்களிலும் இதுபோன்ற அமைப்பினை காணமுடியாது.

— பாண்டிய மன்னர்கள் அளித்த தான உரிமை அவரது ஆட்சி கலைக்கப்படும் வரை செல்லுபடியாகும். இடையிலே வேற்ற ரசர்களின் ஆதிக்கம் நுழையும்போது விண்ணப்பித்து வாங்கிய பிரமதேய தானங்கள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. களப்பிரரின் ஆட்சியில் ரத்து செய்யப்பட்டு மீண்டும் பாண்டியராட்சி ஏற்படும் போதுதான் தான உரிமங்கள் அமுலுக்கு வந்திருக்கின்றன.

தானங்களில் தகராறு ஏற்படும்போது ஏற்கனவே தாம் பெற்றிருந்த உரிமைக்குரிய அத்தாட்சிகள்; செப்பேட்டாதாரங்கள் ஆகியவற்றை, அப்பொழுது ஆண்டு கொண்டிருக்கும் மன்னரி டத்துக் காட்டி மறுஉரிமை பெறுதல் குறித்த விண்ப்பங்கள் பாண்டியரின் கவனத்திற்கு விண்ணப்பங்களால் கொண்டுவரப் பெற்றிருக்கின்றன. விண்ணப்பதாரனின் இதுபோன்ற விடா முயற்சியை வேள்விக்குடி செப்பேட்டில் காணலாம். பாண்டியர் களின் செப்பேடுகளில் காலத்தாற் முற்பட்டது வேள்விக்குடிச் செப்பேடு. இச்செப்பேட்டைப் பற்றிய சில விவரங்கள் வருமாறு;

நற்கொற்றம் என்னும் அந்தணனுச்கு வேள்விக்காக ஓர் ஊரை மன்னன் தானஞ் செய்தான். அவ்வூர் வேள்விக்குடி எனப் பெயர் பெற்றது. நற்கொற்றனின் சந்ததியினர் அனுபவித்து வரும் போது களப்பிரரின் தலையீட்டால் தானம் தடைப்பட்டது, நீண்ட

இடைவெளிக்குப் பிறகு பாண்டியன் கடுங்கோல் ஆட்சிக்கு வரும் போது மேற்படி தானத்திற்குரிய சந்ததியினர் விண்ணப்பிக் கின்றனர்.

வரி: 106. மேனுவின் குரவரற் பான்முறை இன்வ

வரி, 107. மூவாமை மாகந்தோய் மலர்ச் சோலைப் பாகனூர்க் கற்றத்துப் படுவது,

வரி. 108. ... ... வேள்விக்குடி என்னும் பியர் உடையது ஒ

வரி: 109. ல்கதா வேற்றுனை ஓடாத வேலி உடன்காத்த பல்யாகமுதுகுடுமி

வரி. 110. ப் பெருவழுதி என்னும் பரமேச்சுவரனாற் வேள்விக் குடி என்னப்பட்டது களப்ரலால்

வரி. 112. இறக்கப்பட்டது என்று நின்றவன் விஜ்ஞாப்யஞ் செய்ய நன்று நன்றென்று முறுவலித்து

வரி: 113, நாட்டாரின் பழமையாதலால் காட்சி ரீ கொள்க

(வேள்விக்குடி செப்பேடு)

என்றவாறு பாண்டிய மன்னனின் விண்ணப்பத்திற்கு மறு உரை 'கூறியதாக வேள்விக்குடிச் செப்பேடு கூறுகிறது. அதன் பிறகு நற்கொற்றனின் வமிசத்தில் வந்த கொற்கை கிழாருக்குத் தானம் நீர்வார்த்துத் தரப்பட்டதாக வேள்விக்குடிச் செப்பேடு கூறும்.

மேற்கூறிய தளவாய்புர, சிவகாசி, சின்னமனூர், வேள்விக் குடிச் செப்பேடுகளில் விண்ணப்பங்கள் அமையும்போது, செப் பேட்டின் இறுதி ஏடுகளுக்கு முந்திய ஏடுகளில், அதுபற்றிய விவரங் கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு செப்பேட்டிலும் வேந்தனின் வம்ச வரலாறு, வெற்றி தோல்வி, பிற சிறப்புகள், வேண்டுதல் விண்ணப்பம் நிலவெல்லை — ஆகியன அந்தமும் ஆதியுமாக நிரல்படுத்தி அமையப்பெற்றிருக்கும். வெற்றிச் சிறப்புக்கும் நில வெல்லை காட்டிய பகுதிக்கும் இடையில் வரும் சிறுபகுதியே விண்ணப்பம் சம்பந்தப்பட்டதாக அமைந்திருக்கும். இந்நிலையைப் பாண்டியநாட்டுச் செப்பேடுகளில் முற்ற முழுக்கக் காணலாம்.

பல்லவ பட்டயங்கள் — வடமொழி, வட்டெழுத்து, தமிழ் ஆகிய மூன்று நிலைகளில் செதுக்கப்பட்டிருக்கும். பாண்டியர்களின் செப்பேடுகளில் கூட வடமொழியும், வட்டெழுத்தும் விரவி வருகின்றன. ஒரே செப்பேட்டிற்கு வடமொழிப் பகுதியும் உண்டு.

வட்டெழுத்துப் பகுதியும் உண்டு. ஆனால் வடமொழிப் பகுதியில் மட்டும் விண்ணப்பங் குறித்த துளியளவு செய்தியும் அறிய முடியவில்லை.

செய்யுளமைப்பில் அமைந்துள்ள வட்டெழுத்தின் அமைப்பினைக்கொண்டே பலவேறு செய்திகள் நம்மால் அறிய முடிகின்றன. மன்னர்களது பூர்வீகமும் அவர்களது வெற்றிச் சிறப்பும் செதுக்கப்படுகிற செப்பேட்டில் முழுக்க இடம் பெற்றாலும் அவற்றைவிட முக்கியம் வாய்ந்ததாக விண்ணப்ப விளைவால் பெற்றதானங்கள் பற்றிய செய்தியே மிகவும் மையமாக மதிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில், தானங்களை ஊர்ஜிதம் செய்வதற்காகவே செப்பேடுகள் அவ்வக்காலத்து உருப்பெற்றன.

முடிப்புரை.

இதுகாறும் கூறியவற்றால் பாண்டிநாட்டுச் செப்பேடுகளில் தானங்குறித்த விவரங்கள் குறைவு என்பதும் ஒரேவழி. விண்ணப்பத்தின் பயனாய்த் தானம் கிடைக்கும்போது ஊர்ப்பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டது என்பதும் அறியப்பட்டன. மேலும் போர்ப் பூசலால் உரிமைக்குரிய ஆதாரச் செப்பேடு மறைந்து போனவழி மன்னனிடம் மீண்டும் முறையிட்டுத் தானத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் முறைமையைப் பற்றியும், கவிதை நயந்தோய்ந்து பாடிய சாரணத்திற்காகப் பிராமணப் பட்டரின் விண்ணப்பம் மன்னரின் கவனத்தை ஈர்த்தது பற்றிய சிவகாசிச் செப்பேடு குறித்தும், ஆட்சி மாற்றத்தால் தானங்களில் தகராறு ஏற்படும் போது புதிய அரசுகளிடம் மனுச் செய்தது பற்றியும், வம்சவரலாறு, வெற்றி தோல்வி, பிற சிறப்புக்கள், தானம் குறித்த வேண்டுதல் விண்ணப்பம். நில எல்லை என்னும் வரிசைப்படி பாண்டிய செப்பேடுகளில் செய்திகள் விளக்கப்பட்டிருக்கும் முறைமைபற்றியும், வடமொழிப் பகுதியால் ஆன செப்பேட்டில் விண்ணப்பம் குறித்த செய்திகள் கிஞ்சிற்றும் இடம் பெறாமை பற்றியும் அறியவந்தோம்.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ் செல்வம்.

தி. கோ, பஞ்சாபகேசன் திருவிடைமருதூர்.

முன் செய்த நல்வினைப்பயன் மிகுதியானும் பலவகைத் தொழிலின் முயற்சியானும், ஒருவருக்குப் பெருஞ்செல்வம் பெருகும் நமது நாட்டில் பலதலைமுறையாய்ப் பெருஞ்செல்வம் பெருக்கில் வாழ்ந்து வருவோர் பலராவர், வணிகம், கைத்தொழில், அரசியல் அலுவல் முதலியவற்றால் பெருஞ்செல்வர் ஆனோர் பலர். அவை யின்றிச் சென்ற பலவாண்டுகளில் நம்நாட்டில் பரவியுள்ள பஞ்சத்தால் பலவகைப் பொருள்களையும் கொள்முதல் விற்றுமுதல் செய்வதில் பெருப்லாபம் கொள்வதால் பெருஞ்செல்வம் படைத்தோர் மிகப் பலர். செல்வம் பெருகுவதும் அருகுவதும எதனைப்போல் என்பதற்குத் திருவள்ளுவர்

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ் செல்வம்

போக்கும் அதுவிளிந் தற்று"

என்று. கூத்தாடும் அரங்கைப் போல் என்கிறார். நாடகம் ஆடும் கொட்டகையில். நாடகம் காரணமாகப் மக்கட் கூட்டம் நாலா பக்கங்களிலிருந்தும் வந்து கூடுதல் போல, செல்வமும் ஒருவருக்கு நல்வினை காரணமாகப் பலவகையால் வந்துசேரும்; நாடகம் காரணமாகக் கொட்டகையில் வந்து கூடிய மக்கள், அந் நாடகம் முடிந்ததும் வந்த வழியே செல்வது போலே, நல்வினை காரணமாக ஒருவருக்கு உண்டான செல்வம், அந்நல்வினை முடிந்தவுடன் செல்லத்தக்க தாகும் என்பது கருத்து. எந்தவிதச் செல்வமும் யாரிடத்தும் என்றும் நிலைத்திருக்கும் தன்மையுடையதன்று

"குன்றத்தனை யிருநிதியைப் படைத்தோர்

அன்றைப் பகலே அழியினும் அழிவர்"

என்பனவாதிய ஆன்றோருரைகளை யாவரும் அனுபவத்திற்கண்டுணர்ந்தனவே பெருஞ்செல்வம் படைத்தோர், சுற்றந்தழுவலைச் சிறந்த ஒழுக்கமாகக் கடைப்பிடித் தொழுக வேண்டும். சுற்றத்தாரிடம் அன்பு இல்லாதவன் பிறரிடத்தே அன்பு கொள்ளல் அரிது. பெருஞ் செல்வம் பெற்றால், அதனால் அடையும் பயன்

"சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்

பெற்றத்தாற் பெற்ற பயன்"

என்றபடி, சுற்றத்தார்களில் உண்டி, உடை முதலியவற்றிற்கும் துன்புறும் எளியவர்களுக்குத் தம்மால் இயன்ற உதவிபுரிந்து, அச்சுற்றம் தம்மைச் சூழ்ந்திருக்க வாழ்தலேயாம் செல்வம் படைத்தோரிற் பலர், தம்முடைய நெருங்கிய சுற்றங்கட்கு யாதும் உதவாது, மற்றவர்கட்கோ, அல்லது தம்மை யொத்த செல்வர்

கட்கோ தாம் பெற்ற செல்வத்தைக் கொடுக்கிறார்கள். இஃது என்ன அறியாமை! இவ்வொழுக்கத்திற்கு முதன்மையான அன்பு இவர்களிடத்து அரும்புதலைக் காணோமே. செல்வம் இல்லறத்தார்க்கு உரியதன்றோ? துறவறம் மண், பெண், பொன் ஆகிய மூன்றையும் விட்டொழித்தலாம். செல்வம் படைத்தார்க்குப் பிறப்பால் தொடர்புடையாரிடத்து அன்பு அரும்பாதகாலத்து, அவர்கட்கு வேண்டும் உதவிகளைப் புரிதல் எங்ஙனம் கூடும்? அன்பில்லாத இல்வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையாமா? என்பில்லாப்பூச்சி, புழு முதலிய சிற்றுயிர்களை வெய்யில் எவ்வாறு காய்ந்து கொல்லுமோ, அவ்வாறே அன்பில்லாத உயிர்களை அறக்கடவுளாகிய இயமன் காய்ந்து கொல்லத்தக்கவனுவான் என்பர்.

அகத்தின்கண் அன்பு இல்லாதவர் இல்லறத்தில் வாழுதல் பாறையாகிய கடின நிலத்தில் வற்றல் மரம் தளிர்த்தாற் போலும் பயனுடைத்தாகாது. ஐயறிவுடைய கீழ்ப்பறவையாகிய காகங்களிடத்துக் காணப்படும் உயர்ந்த குணமாகிய 'சுற்றந்தழுவுதல்' ஆறறிவு படைத்த மக்களுடல் பெற்றார்களிடத்து இல்லாது போனால் அவ்வுடலைப்பெற்றதனாலே பயனில்லையே. காகங்கள்தாம் ஏதேனும் உணவு பெற்றால், தம் சுற்றங்களாகிய காகங்களைக் கூப்பிட்டு, அவைகளுடன் கலந்துண்ணும் வழக்கத்தை யாம் காட்சியிற் கண்டுள்ளோம். இதனை,

"காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்"

என்று தாயுமானப் பெருந்தகையாரும்

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்

அன்னநீ ரார்க்கே உள" என்று வள்ளுவரும் கூறியிருத்தலால் அறியலாம். செல்வம் படைத்தவர் காகம்போல் சுற்றங்களுடன் கலந்துண்ணும் ஒழுக்கமுடையவராயிருந்தால், அவர்களை அறம் பொருள் இன்பப் பெருக்கைப் பெறுவர் என்பது பெற்றும்: ஆக்கம்-பெருக்கம். இல்லறத்தார்க்குச் சொல்லப்பட்ட ஐவகை நெறிகளுள், ஒக்கல்—அஃதாவது சுற்றமும் ஒன்றாகவகுக்கப்பட்டுள்ளது. சுற்றத்தார்க்கும் ஈயாது துவ்வாதவர்க்கும் வழங்காது வைத்திருக்கும் பொருளுக்கு உவமையாக

"சுற்றுங்—கருங்குளவி—சூரைத் தூறுரி—யப் பேய்
எற்றுஞ். சுடுகா—டிடிகரையின்—புற்றில்
வளர்ந்த—மடற்பனைக்குள்—வைத்தேன்—ஒக்கும்
தளர்ந்தோர்க் கொவி—நீயார்—தனம்"

என்று ஔவைப்பாட்டி கூறியுள்ளார்.

(தொடரும்)